# பண்டுவஸ்நுவர பிரதேச சபை

## குருநாகல் மாவட்டம்

-------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

-----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 25 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 26 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆகஸ்ட் 13 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

---------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடபட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பண்டுவஸ்நுவர பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

----------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

-----------------------------------------

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) பொறியும் பொறித்தொகுதியின் கீழ் கணக்கீடு செய்யப்பட வேண்டிய பெறுமதி ரூபா 873,196 தொகை இனைத் தளபாடங்கள் பொருத்துக்கள் கணக்கின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) உள்ளூராட்சி ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்தப்பட வேண்டிய மீதி ரூபா 3,284,446 தொகை எனினும் ஐந்தொகையில் அவை ரூபா 2,860,475 தொகை என காட்டப்பட்டிருந்தது. ஆண்டிற்கான கடன்கொடுத்தோர் ரூபா 423,971 இனால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(இ) நிதிக் கூற்றுக்களில் கடன்கொடுத்தோரின் கீழ் 2011 மற்றும் 2013 ஆண்டுகள் தொடர்பாக பெறவேண்டிய முத்திரைக் கட்டணம் என ரூபா 8,669,729 தொகை ஒன்று காட்டப்பட்டிருந்த போதும் உண்மையாக மீளாய்வாண்டு இறுதி வரை அக் காலப் பகுதிக்கான நிலுவை முத்திரைக் கட்டணம் மீதி ஒன்று காணப்படவில்லை.

1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

-----------------------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான இறுதி மீதியின் கீழ் 04 கணக்கு விடயங்கள் தொடர்பாக கணக்குகளின் பிரகாரம் மற்றும் உரிய பதிவேடுகளிடையே ரூபா 4,326,119 இற்கான இணக்கமின்மை காணப்பட்டது.

1.3.3 செலுத்த வேண்டிய கணக்குகள்

---------------------------------------------------------

2014 திசெம்பர் 31 திகதியில் செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 67,738,020 தொகையாகும். அவற்றில் 3,488,367 இற்கான மீதி ஒன்று இனங்காண முடியாதிருந்தது. அவற்றில் மொத்தமாக நூற்றிற்கு 8 என ரூபா 5,217,681 தொகை ஒன்று 03 வருடங்களை விட மிகையான காலம் முதல் காணப்படும் மீதிகளாகும்.

02. நிதி மீளாய்வு

----------------------

2.1 நிதி விளைவுகள்

----------------------------

சமர்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் செயற்பாட்டு மிகை ரூபா 23,452,554 ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் செயற்பாட்டு மிகை ரூபா 13,902,422 ஆக காணப்பட்டமையால் செயற்பாட்டு விளைவுகளில் ரூபா 9,550,132 இற்கான முன்னேற்றமொன்று காணப்பட்டது. இந்த செயற்பாட்டு விளைவிற்கு ரூபா 58,290,846 இற்கான மூலதன உதவி மற்றும் ரூபா 82,569,576 இற்கான மூலதன செலவுகளை சீராக்கல் மேற்கொண்ட போது மீளாய்வாண்டிற்பான நிதி விளைவுகள் ரூபா 826,176 இற்கான பற்றாக்குறை ஆக மாறியிருந்தது.

2.2 பகுப்பாய்வு ரீதியான நிதிச் செயலாற்றுகை

------------------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்கான சபையின் மொத்த மீண்டுவரும் வருமானமாகிய ரூபா 109,248,991 தொகையில் மொத்தமாக நூற்றிற்கு 52 என ரூபா 57,034,237 தொகையும் சபையினால் உருவாக்கிய வருமானம் அல்லாத நீதிமன்றத் தண்டப் பணம், முத்திரைக் கட்டணம், சம்பள மீளளிப்பு போன்ற படிகள் தன்மையுள்ள பெறுவனவுகளினால் அடங்கியுள்ளது. மூலதன வருமானமாகிய ரூபா 58,290,846 இற்கான மொத்தத் தொகையும் கமநெகும, மகநெகும போன்ற மூலங்களின் மீது வேறு நிறுவனங்களின் மூலம் அதிகாரப் பிரதேசத்தில் அபிவிருத்தி விடயங்களுக்கு கிடைக்கப்பெற்ற பணத்தினை அடங்கியுள்ளது.

(ஆ) மீளாய்வாண்டிற்கான மொத்த மீண்டுவரும் செலவு ஆகிய ரூபா 85,796,437 தொகையில் மொத்தமாக நூற்றிற்கு 52 என ரூபா 44,303,011 தொகை தனிப்பட்ட சம்பளங்களுக்கான செலவுகளாகக் காணப்பட்டதுடன் அவற்றில் மொத்தமாக நூற்றிற்கு 96 ஆகிய ரூபா 42,517,413 இற்கான சம்பள மீளளிப்பு என உள்ளூராட்சி

ஆணையாளரினால் வழங்கப்பட்டு ஏனைய வருமானங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதே போல் மூலதன செலவு ஆகிய ரூபா 82,569,576 தொகையில் மொத்தமாக சுமார் நூற்றிற்கு 29 என ரூபா 24,278,730 தொகை மாத்திரம் சபை நிதியத்தில் இருந்து செலவிடப்பட்டிருந்ததுடன் மீதியான நூற்றிற்கு 71 ஆகிய ரூபா 58,290,846 இற்கான தொகை கமநெகும, மகநெகும ஆகிய மூலங்களின் மீது வேறு நிறுவனங்களின் ஏற்பாடுகளின் மூலம் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி விடயங்களாகும்.

2.3 வருமான நிருவாகம்

----------------------------------

2.3.1 நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

---------------------------------------------------------------------------------------------

மாகாண சபை பிரதான செயலாளரிடம் மீளாய்வாண்டு தொடர்பாக பெற வேண்டிய நீதி மன்றத் தண்டப் பணத் தொகை ரூபா 1,958,137 ஆகக் காணப்பட்டதுடன் முத்திரைக் கட்டணம் ரூபா 10,118,014 தொகை ஆகும்.

2.3.2 வாடகை மற்றும் சந்தை வாடகை

-------------------------------------------------------------

(அ) கடை வாடகைகளை குறிப்பிட்ட தினத்தில் அறவீடு செய்வதற்காக நடவடிக்கைகள் எடுக்காமையால் ரூபா 339,120 இற்கான நிலுவை கடை வாடகையை அறவீடு செய்வதற்காக மூன்று நபர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வதற்காக சபைக்கு நேரிட்டிருந்ததுடன் அந்த நபர்கள் தற்போது வெளிநாடு சென்றுள்ளமையால் அந்த நிலுவை வாடகையை அறவீடு செய்வதற்காக முடியாதிருந்தது.

(ஆ) பண்டார கொஸ்வத்த, ஹெட்டிபொல வாராந்த சந்தைகள் மற்றும் வெற்றிலை சந்தை போன்ற சந்தைகள் தொடர்பாக சந்தைக் கட்டணத்தை அறவீடு செய்தல் முறைப்படி மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அத்துடன் சதுர அளவு மற்றும் வர்த்தகத்தின் தன்மையின் பிரகாரம் அறவிடப்படக் கூடிய கட்டணத் தொகையை அங்கீகரித்திருந்தமை அவதானிக்கப்படவில்லை.

(இ) ஆசிய அபிவிருத்தி செயற்திட்ட உதவியின் கீழ் ரூபா 41,128,218 தொகையொன்று செலவிடப்பட்டு 2011 ஆண்டின் போது நிர்மாணிக்கப்பட்டிருந்த பல் கரும கட்டிடத்தில் காணப்பட்ட 09 கடைகளுக்காக 2014 ஆண்டு இறுதி வரை வாடகைக்கான பெறுமதி மதிப்பீட்டு அறிக்கை பெற்றிருக்கவில்லை.

03. செயற்பாட்டு மீளாய்வு

------------------------------------

3.1 செயலாற்றுகை மதிப்பீடு

----------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 ஆண்டின் போது ஊருக்கு ஊர் வீட்டுக்கு வீடு ஏற்பாடுகள் ரூபா 3,100,000 தொகையினால் அமுல் நடத்துவதற்காக அங்கீகரிக்கப்பட்ட 12 செயற்திட்டங்கள் ஆண்டின் போது மேற்கொள்வதற்கு இயலாமையினால் அந்த நிதி சபைக்கு கிடைத்திருக்கவில்லை.

(ஆ) சபையினால் 2014 ஆண்டின் போது மேற்கொள்வதற்கு திட்டமிட்டு பாதீட்டு பிரேரணைகள் உட்படுத்தியிருந்த ரூபா 6,500,000 கிரயத்தை உடைய மூன்று மூலதன செயற்திட்டங்கள் செயற்படுத்தியிருக்கவில்லை.

(இ) சபையின் அரசியல் அதிகாரிகளினால் 2014 பெப்ரவரி 23 முதல் 28 வரை ஒரு மந்திரி இந்தோனேஷியாவுக்கும் 2014 ஆகஸ்ட் 24 முதல் 29 வரை 07 மந்திரிமார்கள் மலேசியாவுக்கும் 2014 அக்டோபர் 18 முதல் 23 வரை 10 மந்திரிமார்கள் தாய்லாந்திற்கும் ஆக வெளிநாட்டு பிரயாணங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அத்துடன் அதற்காக சபை நிதியத்தில் ரூபா 2,645,912 தொகை செலவிடப்பட்டிருந்தது.

3.2 முகாமைத்துவத் திறமையின்மை

-----------------------------------------------------

பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையினால் 2010 ஆண்டு முதல் பயன்படுத்தப்படும் இலக்கம் 53-6109 கொண்ட கப் வண்டியின் உரிமையை உரித்தாக்கி நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உட்படுத்துவதற்காக மீளாய்வாண்டு இறுதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) பல வருட காலமாக அறவிடப்படாமல் காணப்பட்ட தற்போது சேவையில் இல்லாத 17 ஊழியர்கள் பதவியணிக் கடன் மீதி ரூபா 46,218 ஆகும்.

3.3 செயற்பாட்டுத் திறமையின்மை

-------------------------------------------------

(அ) உள்ளூராட்சி அமைச்சில் இருந்து சபைக்கு கிடைத்திருந்த 03 வாகனங்கள் 2015 ஜூன் மாதம் வரை பதிவு செய்து பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) 2012 ஜூலை 10 திகதி, ஒன்று ரூபா 137,750 வீதம் ரூபா 275,500 செலவிடப்பட்டு கொள்வனவு செய்திருந்த கொங்கிரீட் அச்சுகள் உற்பத்தி இயந்திரங்கள் மற்றும் கொங்கிரீட் அச்சுக்களுக்காக 2012 அக்டோபர் 30 கொள்வனவு செய்திருந்த 24x16 அளவான ரூபா 124,500 பெறுமதியான 415 பலகைத் தட்டுகள் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது. அத்துடன் குறிப்பிட்ட இயந்திரங்களின் உத்தரவாத காலம் பயன்படுத்தப்படாமல் முடிவடைந்துள்ளது.

04. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

-----------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(ஈ) ஒப்பந்த நிருவாகம்

(உ) வாகனக் கட்டுப்பாடு